திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்பொழுது அங்கு மணற்பாங்காக இருப்பதால் தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கிறது என்று கூறினர்கள். மணற்பாங்கான இடத்தில் தென்னைதான் அதிகமாகப் பயிர் செய்யப்படுகிறது. அங்கு நெல் பயிர் செய்யப்படுவதில்லை. இன்னும் இங்கே மரவள்ளிக்கிழங்கு பயிரிடப்படுவது தண்ணீர் தட்டிற்குக் காரணம் என்று சொன்னர்கள். தண்ணீர் கிடைக்காததால்தான் திரும்பவும் மரவள்ளிக்கிழங்கு பயிரிடப்படுகிறது. அங்கே தொடர்ந்து தண்ணீர் விடாத நிலைமை இருக்கிறது. விளவங்கோடு தாலுக்கா நெல் விளைச்சல் குறைந்த இடம். எனவே, அங்கே தொடர்ந்து தண்ணீர் விடாத நிலைமையை மாற்றுவதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. டென்னிஸ் அவர்கள் ஏற்கனவே அதைப்பற்றி இந்த அரசுக்குப் புகார் தெரிவித்ததன் பேரில் தலைமைப் பொறியாளரை அனுப்பி அங்கே பார்த்து அரசுக்கு அறிக்கை அனுப்பும்படி சொன்னேம். அவர் பார்த்த பிறகு இந்த விவரங்களைத் தந்திருக்கிறார். எவ்வளவு நீரை அனுப்பினலும் அது கடைசி கடை மடைக்குப் போகவில்லை என்ற கருத்து வந்திருக்கிறது. அந்த மண்ணுக்கு ஏற்ற பயிரைப்பற்றி வேளாண்மைத் துறையினர் ஆய்வு செய்து தலைமைப் பொறியாளருக்கு அனுப்பியிருக்கிறார்கள். தலைமைப் பொறியாளரிடமிருந்து அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை. அந்த அறிக்கை கிடைத்த பிறகுதான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) சென்னை நகரில் ரேஷன் கார்டுகள் வைத்திருப்பவர்களுக்கு ரவை, மைதா போன்ற உணவு தானியங்கள் கிடைக்காமை குறித்து

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

1973 டிசம்பர் 4] [திரு. எம். ஏ. லத்தீப்]

"சென்னை நகரில் ரேஷன் கார்டுகளை வைத்திருப்பவர்கள் குறிப்பிட்ட கடைகளில் உணவு தானியங்கள், ரவை, மைதா போன்றவைகளை தொடர்ந்தாற்போல் "ஸ்டாக் இல்லை" என்ற அறிவிப்பின் அடிப்படையில் அடிக்கடி பெறமுடியாமல் அவதிப் படுகின்ற நிலைபற்றி".

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி: சென்னை நகரில் ஏழை மக்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலைகளில் அரிசி வழங்கும் திட்டத்தை இந்த அரசு நடத்தி வருகிறது. இதற்காக வரையறுக்கப்பட்ட வருமான வரம்பு திங்கள் ஒன்றுக்கு ரூ. 300 ஆகும். இத்திட்டத்தின் கீழ் சுமார் 3.56 லட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மாதம் ஒன்றுக்கு பெரியவர்களுக்கு 4 கிலோ வீதமும் சிறியவர்களுக்கு 2 கிலோ வீதமும் அரிசி கீழ்க்கண்ட விலைகளில் வழங்கப்படுகிறது.

	ரூ.	பை.
முதல் தரம் கிலோ ஒன்றுக்கு	1	20
இரண்டாம் ரகம் கிலோ ஒன்றுக்கு	1	10

ரூபாய் 300-க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு சுமார் 1.40 இலட்சம் சர்க்கரை அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு உயர்ரக அரிசி ஒரு குடும்பத்திற்கு திங்கள் ஒன்றுக்கு 15 கிலோ விதம் கையிருப்பைப் பொறுத்து வழங்கப்படுகிறது. நகரில் 540 கடைகள் மூலமாக உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

கோதுமை, கோதுமைப் பொருட்கள்

கோதுமையையே வழக்கமாக உணவாக உட்கொள்பவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு கோதுமை 6 கிலோ வீதமும், நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு திங்களொன்றுக்கு 5 கிலோ வீதமும் வழங்கப்படுகிறது. மத்திய அரசு 1962-ம் ஆண்டு நவம்பர் திங்கள் வரை 35,000 டன் கோதுமையை நம் மாநிலத்திற்கு ஒதுக்கி வந்தது. ஆனால் பிறகு இந்த ஒதுக்கீடு படிப்படியாகக் குறைக்கப்பட்டு நடைபெறும் டிசம்பர் திங்களுக்கு மிகவும் குறைந்தளவான 9,000 டன் மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இந்த ஒதுக்கீட்டைத் தான் நாம் கோதுமையையே உணவாக பயன்படுத்துவோர்க்கும், ரொட்டி தயாரிப்பவர்களுக்கும் பெருமளவு பயன்படுத்தும் சிற்றுண்டி சாலைகள், உணவு விடுதிகள் போன்ற நிறுவனங்களுக்கும்

மற்றும் குடும்ப அட்டைகளின் பெயரில் பொதுமக்களுக்கும் வழங்கவேண்டியுள்ளது. ஆதலினால் மத்திய அரசை நம் மாநிலத்துக்கு குறைந்த பட்சம் 20,000 டன்னாவது ஒதுக்கீடு செய்து தர வேண்டிக்கொண்டோம். அக்டோபர் மாதம் வரை கோதுமைப் பொருட்கள் கீழ்க்கண்ட விகிதத்தில் வழங்கப்பட்டது:

	மைதா/ரவா	கோதுமை மாவு
அரிசி அட்டைகள்	2 கிலோ	4 கிலோ
சர்க்கரை அட்டைகள்	3 கிலோ	6 கிலோ

கோதுமை ஒதுக்கீடு குறைந்ததை அடுத்து கோதுமைப் பொருட்கள் இருப்பும் குறைந்துவிட்டது. எனவே நவம்பர் 73 முதல் இப்பொருட்களின் விநியோக அளவு கீழ்க்கண்டவாறு குறைக்கப்பட்டுள்ளது.

	மைதா/ரவா	கோதுமை மாவு
அரிசி அட்டைகள்	1 கிலோ	2 கிலோ
சர்க்கரை அட்டைகள்	2 கிலோ	3 கிலோ

பொங்கல் கிறிஸ்மஸ் திருநாளை முன்னிட்டும், புதுவருடப் பிறப்பை முன்னிட்டும் மேலும் 5,000 டன் அளவாவது ஒதுக்கீடு செய்யுமாறு வற்புறுத்தியுள்ளோம். பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

ரவை, மைதா தவிர மற்ற எந்த உணவு தானியங்களுக்கும் தட்டுப்பாடு இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப்: அரசாங்கத்திடம் ஸ்டாக் இல்லாததால் பங்கீட்டுக் கடைக்காரர்களிடம் ஸ்டாக் இல்லை என்ற நிலைமை இருந்தால் பரவாயில்லை. அரசாங்கத்திடமிருந்து சப்ளை பெற்ற பிறகு தவறான முறையில் பயன்படுத்த ஸ்டாக் இல்லை என்று சொல்லி கன்ஸ்யூமர்களுக்குக் கொடுக்காமல் மறுக்கிற நிலை இருக்கிறது. இதைத் தடுக்க சரியான முறையில் டிஸ்ட்ரிப்யூஷன் நடக்கிறதா என்பதற்கான கண்காணிப்பு முறை வைக்கப்பட்டிருக்கிறதா? குறிப்பாக, சென்னை மாநகரத்தில் இந்தப் பிரச்சினை அதிகமாக இருக்கிறது. எங்களுடைய தலைவர் திருப்பூர் மொய்தீன் சாயபு அவர்கள் தொகுதியான ஹார்பர் தொகுதியில் இந்தப் பிரச்சினை

1973 டிசம்பர் 4] [திரு. எம். ஏ. லத்தீப்]

அதிகமாக எழுந்திருக்கிறது. அந்தத் தொகுதியிலுள்ளவர்கள் எல்லாம் கையெழுத்திட்டு மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி: இப்போது நடைமுறையிலுள்ள முறைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். 35,000 டன் வந்த இடத்திலே 9,000 டன்தான் கொடுத்திருக்கிறார்கள். எத்தனை நாட்களுக்கு இதனைக் கொடுக்க முடியும் என்று பார்த்து அந்தந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கு ஓரளவு கொடுக்கப்பட்டு வருகிறது. தவறு ஏற்பட்டிருக்குமானால் அதைப்பற்றித் தனியாகக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே, நாங்கள் கொடுப்பதில் அதிகத் தவறு இல்லாமல் கூடிய வரையில் நல்ல முறையில் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். ஒவ்வொரு மாதமும் இதுபற்றிச் சர்க்கார் மிகக் கவனமாகக் கவனம் செலுத்தி வருகிறது.

(ஈ) மேட்டூர் கெமிக்கல்ஸ் தொழிலாளர் வேலை நிறுத்தமும் அதனால் ஏற்பட்டுள்ள தொழிலாளர் பாதிப்பும் குறித்து

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, சேலம் ஜில்லா மேட்டூரிலிருக்கும் மேட்டூர் கெமிக்கல்ஸ் தொழிற்சாலைகளில் இரண்டில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தங்களின் 7 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 26—11—1973-ம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்து வருவது பற்றியும், இதனால் அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலைபற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மேட்டூர் ரசாயன தொழில் கழக (வரையறைக்குட்பட்டது) தொழிற்சாலை மேட்டூரில் இரண்டு தொழிற்சாலைகளில் எரிகாரம் மற்றும் ரசாயனங்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளன.

(1) கெமிக்கல் தேசிய தொழிலாளர் சங்கம், மேட்டூர் அணை;

(2) மேட்டூர் கெமிக்கல் தேசிய தொழிலாளர் சங்கம், மேட்டூர் அணை (ஐ.என்.டி.யு.சி.) : மற்றும்

(3) மேட்டூர் கெமிக்கல் தொழிலாளர் சங்கம், மேட்டூர் அணை (சி.ஐ.டி.யு.) ஆகிய சங்கங்கள்.